# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.11.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# ராஜித சேனாரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**ராஜித சேனாரத்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ராஜித சேனாரத்ன மன்றம்
## (கூட்டிணைத்தல்)

### ராஜித சேனாரத்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை

“ராஜித சேனாரத்ன மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களினால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அம்மன்றத்தைக் கூட்டிணைத்தல் செய்யுமாறு கோரியுள்ளமையினாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ராஜித சேனாரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ராஜித சேனாரத்ன மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” என குறிப்பீடு செய்யப்படும்) ராஜித சேனாரத்ன மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் கூட்டிணைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படு பவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதன கத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “ராஜித சேனாரத்ன மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது

இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) நகரத்தின் கேந்திரமாகவுள்ள வளங்களைக் கொண்டு கிராமிய மட்டத்திற்கு வியாபிக்கச் செய்வதற்காக களுத்துறை மாவட்ட வளங்கள் மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பித்தல் ;

(ஆ) களுத்துறை மாவட்டத்தில் தேவைகள், பிரச்சினைகள், வளங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றை இனங்கண்டு மற்றும் அதன் அடிப்படையில் சிறு கைத்தொழில் வலயத்தை ஏற்படுத்தி இளைஞர் சமுதாயத்தின் ஒத்தாசையைக் கட்டியெழுப்புதல் ;

(இ) களுத்துறை மாவட்டத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் பிரிவினரை தொடர்பு படுத்தி ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல் ;

(ஈ) களுத்துறை மாவட்டத்தில் நிலவுகின்ற சுகாதாரம் மற்றும் அதனோடு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க மருத்துவ கிளினிக் மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் ;

(உ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அது தொடர்பாக மக்களை தெளிவு படுத்தல் ;

(ஊ) இலங்கையில் பெண்களின் பொருளாதார நிலையை வளப்படுத்துவதற்கு சுயதொழில் வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல், அறிவை வழங்குதல், சுயவேலைத்

திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு பணத்தால் அல்லது வேறு வகையான உதவிகள் வழங்குதல் அல்லது அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்குத் திட்டமிடல், கொள்வனவு செய்தல் ;

(எ) இளைஞர் சமூகத்திற்குக் கல்வி மற்றும் தொழில்பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துதல் மற்றும் வர்த்தக வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல், சுயவேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு பணத்தால் அல்லது வேறு வகையான உதவிகள் வழங்குதல் அல்லது அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வ தற்கு விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்லல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு உபதேசங்கள், மாநாடுகள், கலந்துரையாடல்கள் மற்றும் கண்காட்சி நிகழ்ச்சிகள் நடாத்துதல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு சமமான குறிக் கோள்களையுடைய பிறநிறுவனங்கள், அமைப்புகள் அல்லது சங்கங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுதல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்

**4.** இச்சட்டத்தின் மற்றும் வேறு ஏதாவது எழுத்து வடிவிலான சட்டங்களுக்குக்கீழ் வங்கிக்கணக்கு ஆரம்பித்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் மூடுதல், பிணையுடன் அல்லது பிணையின்றி பணம் கடனாகப்பெறுதல் அல்லது பெற்றுக்கொள்ளல், அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் பெற்றுக்கொள்ளல் அல்லது சேகரித்தல், கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை முதலீடு செய்தல் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தேவை யான உத்தியோகத்தர்களை அல்லது ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் உள்ளடங்களாக கூட்டுத்தாபனத்தின் சகல குறிக்கோள்கள் அல்லது அதில் சில குறிக்கோள்களையாவது நிறைவேற்றுவதற்கு அல்லது அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள், நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கான அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் இந்தச் சட்டத்தின் 6 ஆவது வாசகத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக் கமைய தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையோர் பங்கேற்கும் நிறைவேற்று சபையொன்றினால் நிர்வகிக்கப் படும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

*(2)* இந்தச் சட்டம் அமுலுக்குவரும் ஆரம்ப தினத்திற்கு முந்திய நாட்களில் இருந்த மன்றத்தின் நிறைவேற்றுச் சபை, கூட்டுத்தாப னத்தின் முன்னைய நிறைவேற்றுச் சபை ஆகும்.

**6.** *(1)* கூட்டுத்தாபனத்தின் ஏதாவது பொதுக்கூட்டத்தின் போது அதில் கலந்துகொள்ளும் வாக்காளர் அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குகளில், பின்வரும் விபரங்கள் அனைத்தும் அல்லது அதில் யாதேனுமொன்று தொடர்பாக இந்தச் சட்டத்தில் அல்லது பிற எழுத்துமூல விதிமுறைகளுக்கு அமையாத சட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் காலத்திற் குக்காலம் தயாரித்தல் சட்டரீதியானதாகும் :-

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்*

(அ) அங்கத்தவர்களை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பி னருக்கும் உரிய அங்கத்தவர்களினால் செலுத்த வேண் டிய கட்டணம் மற்றும் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல், அவர்கள் விலகு தல், அவர்களின் பதவியைப் பறித்தல் அல்லது பதவியை நீக்குதல் மற்றும் அவர்களின் அதிகாரம், நடவடிக்கைகள் மற்றும் வேலைகள் ;

(இ) நிறைவேற்றுச் சபையினால் அங்கத்தவர்கள் தெரிவு செய்தல், அவர்களின் அதிகாரம், நடவடிக்கைகள், வேலைகள் மற்றும் நிறைவேற்றுச் சபை அங்கத்தவர்க ளின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உத்தியோகத்தர்களின், பிரதிநிதிகளின் மற்றும் ஊழியர்களின் அதிகாரம், நடவடிக்கைகள், வேலைகள் ;

(உ) நிறைவேற்றுச் சபை கூட்டத்தில் பின்பற்றவேண்டிய சட்ட திட்டங்கள், அக்கூட்டத்தைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல், அந்தக் கூட்டம் நடாத்தப்படும் நேரம், இடம் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவித்தல் மற்றும் அச்கூட்டங்களின் நிகழ்ச்சிநிரல் மற்றும் அவசிய கூட்டநாள் எண்ணிக்கையினர் மற்றும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் பொறுப்பு மற்றும் கூட்டுத்தாபனத்தின் கணக்கைப் பராமரித்தல் மற்றும் அதனை கணக்காய்விற்கு உட்படுத்தல் ; மற்றும்

(எ) பொதுவாக அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படும் சட்டமொன்று (1) உப பந்தியின்கீழ் சட்டமொன்றைத் தயாரிக்க முடியுமான விதத்திலேயே அவ்வாறான கூட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல் மாற்றம் செய்தல் அதற்கு ஏதாவது ஒன்றை இணைத்துக் கொள்ளல் அல்லது அதை நீக்குதல் செய்ய முடியும்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல்.

**மன்றத்தினால் அல்லது மன்றத்திற்குச் செலுத்த வேண்டிய மற்றும் அறவிடப்பட வேண்டிய நிதி**

**7.** இந்தச்சட்டம் அமுலுக்குவரும் ஆரம்ப தினத்திற்கு முந்திய நாளில் இருந்த மன்றத்தின் சகல கடன்கள் மற்றும் பொறுப்புகள் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தி விடுவிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினமே மன்றத்தின் அறவிடப்பட வேண்டிய அல்லது செலுத்த வேண்டிய சகல கடன்கள், பங்கு தாரர் நிதி மற்றும் அங்கத்துவ நிதி இச்சட்டமூலத்தின் பணிக ளுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

**கூட்டுத்தாபனம் அசையும் அசையா சொத்துகளை வைத்திருத்தல்**

**8.** ஏதேனுமோர் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, எழுத்துமூலம் வழங்கப்படுகின்ற அல்லது வேறு ஏதாவது ஒரு முறையில் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் அசையும் மற்றும் அசையா சொத்து ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் கொடுப்பதற்கு சட்டத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு இயலுமை மற்றும் அதிகாரம் கிடைத்துள்ளதுடன், அந்த சொத்துக்களை விற்பனை செய்தல், அடகு வைத்தல், குத்தகைக்கு அளித்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறு ஏதாவது முறையில் வெளி யேற்றுவதற்கான முழு அதிகாரத்துடன் இந்தச் சட்டத்தின் பணி களுக்காக கூட்டுத்தாபனத்திற்கு அனைத்து உரிமைகளும் உண்டு.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்**

**9.** (1) கூட்டுத்தாபனத்திற்கு சொந்த நிதியம் இருத்தல் வேண்டும். பரிசுகள் அல்லது அன்பளிப்பு, நன்கொடைகள், ஒதுக்கீடுகள், சந்தா தாரர் பணம், அங்கத்துவ நிதி அல்லது கட்டணமாக கூட்டுத்தாப னத்திற்கு அல்லது கூட்டுத்தாபனத்தினால் கிடைக்கும் பணம், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கும் விதத்தில் ஒரு வங்கிக்கு அல்லது பல வங்கிகளுக்கு கூட்டுத்தாபனத்தின் கணக்கிற்கு வைப்புச் செய்ய முடியும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்தும் போது கூட்டுத்தாபனத்தால் செலவு செய்யப்படும் செலவினங் கள் சகலவற்றையும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்த முடியும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை**

**10.** கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது பொருளாளரின் முன்னிலையில் அன்றி கூட்டுத்தாபனத்தின் முத்திரை எந்த பத்திரங்களிலும் இடக்கூடாது என்பதுடன், அவர்களினால் தாம் வந்தமைக்கு அடையாளமாக அந்தப்

பத்திரங்களில் தமது பெயர் மற்றும் கையொப்பத்தை இடுதல் வேண்டும். மேலும், அந்த கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்கு சாட்சியாளர்களாக யாரேனுமொருவர் கையொப்பமிடல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்

**11.** இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் மற்றும் அவர்களினால் அவர்களினது மற்றும் அவர்களின்கீழ் உரிமை பெறுகின்றவர்களின் உரிமைகள் தவிர்ந்த, குடியரசின் அல்லது ஒரு அரச சபை அல்லது கூட்டுத்தாபனம் அல்லது வேறு எந்த நபர்களினதும் உரிமைகளுக்கும் இந்தச் சட்டத்தில் உள்ள எவற்றினாலும் பாதிப்புகள் அல்லது தாக்கம் ஏற்படுத்தக்கூடாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.